IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 4 )**

Solemnly affirmed and sworn by Tr.Saravanan, Gr.III Bench Clerk on 29.1.2020 in accordance with the provisions of Act X of 3331.

அ.வ.எண். 468/2010

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனலட்சுமி | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.4 தனலட்சுமி 29.1.2020 இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை

நான் திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட அழைப்பாணையை தொடர்ந்து சாட்சியம் அளிக்கிறேன். மேலக்கோட்டை கிராம சர்வே எண்.14/14க்கான உட்பிரிவில் அடங்கிய அ பதிவேடு, சிட்டா, அடங்கல் மற்றும் புல வரைபடம் ஆகியவைகளின் நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1. சம்மனில் குறிப்பிட்டுள்ள திருமங்கலம் வட்டாட்சியரின் உத்தரவான ந.க.எண்.18006/2009/G3 நாள்23.12.2009, உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மேல் முறையீடு மூ.மு.எண்.2637/2010/அ3 நாள் 5.5.2010, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் (WP (MD) No.12522and 12523/2010 date 25.03.2014 ) உத்தரவின் நகல் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை. மேற்படி உத்தரவு உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்டதால் மேற்படி கோப்புகள் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் )

பட்டா வழங்கும் அதிகாரம் எனக்கு உள்ளது என்றால் சரிதான். பட்டா வழங்கும் அதிகாரம் துணை வட்டாட்சியருக்கு இல்லை என்றால் சரியல்ல. மண்டல துணை வட்டாட்சியர் எனது அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்றால் சரிதான். மண்டல துணை வட்டாட்சியர் பிறப்பிக்கும் பட்டாவினை வட்டாட்சியர் பரிசீலனை செய்வது இல்லை. பட்டா மாறுதல் கேட்டு தரப்பினர் மூலமாகவும், வழக்கறிஞர்கள் மூலமாகவும் பரிகாரம் கோர இயலும் என்றால் சரிதான். வா.சா.ஆ-12 உத்தரவு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் கோரும் போது பட்டா மாறுதல் செய்த மூல ஆவணத்தை சேர்த்து தாக்கல் செய்திருப்பார் என்றால் சரிதான். உரிமைகள் சம்மந்தமாக தலையீடுவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-12 பற்றி எனக்கு முழு விபரம் தெரியாது. ந.க.எண்.18006/2009/G3 நாள் 23.12.2009 வட்டாட்சியர் உத்தரவு தேடிப்பார்த்ததில் எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேற்படி கோப்பு பதிவறையில் ஒப்படைக்கபடவில்லை. கோப்புகள் மேல்முறையீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் போது D. NO. குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும். D.No. எங்கள் கோப்பில் இல்லை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுப்பி வைக்ப்பட்டது. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு மட்டும் அனுப்பி வைக்கப்பட்டது. கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட மாட்டாது. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு வா.சா.ஆ-12 என்றால் சரிதான். வா.சா.ஆ-12 ஆவணத்தின் அதன் நகல் ராமுத்தாய் என்பவருக்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-12 உத்தரவில் ராமுத்தாய் தவிர மற்ற உரிமையாளர்கள் தரப்பினர்கள் இல்லை என்றும் உத்தரவு அவர்களுக்க அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் தல ஆய்வு செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.

கிராம நிர்வாக அலுவலரை சொத்து சம்மந்தமாக ஆவணங்களை சமர்பிக்க சொல்லி ஆய்வு செய்வதற்கு வருவாய் கோட்டாட்சியருக்கு உரிமை உள்ளது. வா.சா.ஆ-12 உத்தரவில் சரியான நடைமுறை பின்பற்றவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-12 உத்தரவில் கண்ணாடிசாமி மற்றும் இளஞ்சியம் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் திருமங்கலம் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் வட்டாட்சியர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் செய்த தவறினை மறைப்பதற்காக எதிர் வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் மறுவிசாரணை செய்ய உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும் அது பற்றி நடவடிக்கை எடுக்கபட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு உத்தரவிட்டுள்ளது. வா.சா.ஆ-2 ஆவணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றால் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. கோப்புகள் மேல்முறையீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் போது நகல் எடுத்து அலுவலகத்தில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். ஆனால் கோப்புகளின் நகல் எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேற்படி உத்தரவு 2010ம் ஆண்டு நடந்ததால் அது பற்றி எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை செய்ய வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**30.1.2020 :**

**அசல் வழக்கு எண்.468/2010**

வா.சா.4 தனலட்சுமி		பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா.ஆ-18 ஆவணத்தில் திருமங்கலம் வட்டாட்சியர் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-18 ஆவணத்தில் திருமங்கலம் வட்டாட்சியர் தரப்பினராக இல்லாததால் அதன் விபரம் பற்றி எனக்கு தெரியாது. வருவாய் துறையில் தாக்கல் செய்யப்படும் மனு சம்மந்தமாக உத்தரவு ஏற்படும் பட்சத்தில் தரப்பினருக்கு மட்டும் உத்தரவு அனுப்பப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ-12 ஆவணத்தில் ந.க.எண்.18006/2009/C3 கோப்பினை தொலைபேசி மூலமாக கேட்கப்பட்டது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். PSO உத்தரவின் படி புதிதாக உத்தரவு பிறப்பிக்கபடும் வரை ஏற்கனவே உள்ள உத்தரவு நடைமுறையில் இருந்து வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ-12 உத்தரவினை ரத்து செய்து வேறு உத்தரவு எதுவும் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கபடவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி அனுமதியின் பேரில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

இது நாள் வரை இந்த வழக்கில் திருமங்கலம் வட்டாட்சியருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.